

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள திமிரி மத்திய, திமிரி கிழக்கு, வாலாஜா தெற்கு, காவேரிப்பாக்கம் தெற்கு ஆகிய ஒன்றியங்களிலும், ஆற்காடு நகரத்திலும், கலவை, விளாப்பாக்கம், திமிரி, காவேரிப்பாக்கம் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 18.06.2025 | திமிரி மேற்கு ஒன்றியம் | வெங்கடாபுரம் | வெ.ஆர்த்தி |
| 2 | | கணியம்பாடி ஒன்றியம் | நெல்வாய் ஊராட்சி | வெ.ஆர்த்தி |
| 3 | | கணியம்பாடி ஒன்றியம் | மூஞ்சூர்பட்டு ஊராட்சி | வெ.ஆர்த்தி |
| 4 | | காவேரிப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | பன்னியூர் சாலை | த.கங்கா |
| 5 | | காவேரிப்பாக்கம் வடக்கு | பானாவரம் | த.கங்கா |
| 6 | | மேல்விஷாரம் நகராட்சி | ஹாஜி பேட்டை | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 7 | | ஆற்காடு மேற்கு ஒன்றியம் | உப்புப்பேட்டை ஊராட்சி | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 8 | 20.06.2025 | நெமிலி மேற்கு ஒன்றியம் | மேலபுலம் புதூர், காட்டுப்பாக்கம். | வெ.ஆர்த்தி |
| 9 | | பனப்பாக்கம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | வெ.ஆர்த்தி |
| 10 | | நெமிலி மேற்கு ஒன்றியம் | காட்டுப்பாக்கம் | வெ.ஆர்த்தி |
| 11 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | இச்சிப்புத்தூர் | சேர்க்காடு கென்னடி |
| 12 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | பெருங்களத்தூர், இந்திரா நகர். | சேர்க்காடு கென்னடி |
| 13 | | இராணிப்பேட்டை நகரம் | எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில், சந்தை மைதானம். | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| 14 | | வாலாஜா மத்திய ஒன்றியம் | வானாப்பாடி | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| 15 | 21.06.2025 | அரக்கோணம் நகரம் | பழனிப்பேட்டை | தூத்துக்குடி சரத்பாலா |
| 16 | | அரக்கோணம் நகரம் | இந்திரா காந்தி சிலை அருகில் | தூத்துக்குடி சரத்பாலா |
| 17 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், சித்தூர். | சேர்க்காடு கென்னடி |
| 18 | | நெமிலி பேரூர் | பேருந்து நிலையம் | சேர்க்காடு கென்னடி |
| 19 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், நாகவேடு. | சேர்க்காடு கென்னடி |
| 20 | 22.06.2025 | நெமிலி வடக்கு ஒன்றியம் | மேலேரி ஊராட்சி | இரா.தமிழ்வாணன் |
| 21 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | உரியூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| 22 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | அனந்தாபுரம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 23 | | தக்கோலம் பேரூர் | தேரடி | தூத்துக்குடி சரத்பாலா |
| 24 | | நெமிலி வடக்கு ஒன்றியம் | திருமால்பூர் | இரா.தமிழ்வாணன் |
| 25 | 23.06.2025 | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | ஆயில் ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| 26 | | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | சூரை ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| 27 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | தண்டலம் | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 28 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | கும்மினிப்பேட்டை | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 29 | 24.06.2025 | சோளிங்கர் நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 30 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | பாராஞ்சி | கந்திலி கரிகாலன் |
| 31 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | சாலை | கந்திலி கரிகாலன் |
| 32 | 25.06.2025 | வாலாஜா நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 33 | | ஆற்காடு கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 34 | | அம்மூர் பேரூர் | அண்ணாசிலை அருகில் | கந்திலி கரிகாலன் |
| 35 | | வாலாஜா கிழக்கு ஒன்றியம் | சாத்தம்பாக்கம் | கந்திலி கரிகாலன் |
| 36 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கரடிக்குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 37 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கோவிந்தச்சேரி குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 38 | 26.06.2025 | நெமிலி கிழக்கு ஒன்றியம் | கணபதிபுரம், சேந்தமங்கலம். | எட்டயாபுரம் தமிழ்பிரியன் |
| 39 | 27.06.2025 | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | காட்ராம்பாக்கம் | முரசொலி மூர்த்தி |
| 40 | | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | வடகடபந்தாங்கல் | முரசொலி மூர்த்தி |

இராணிப்பேட்டை

நாள் : 17-06-2025






சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், நேற்று (17.06.2025) உலக குருதி கொடையாளர் தினம் 2025 நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு 66 முறை இரத்த தானம் செய்துள்ளதை பாராட்டி ”தொடர் தன்னார்வ குருதி கொடையாளர் என்கின்ற சிறப்பு விருது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமாரால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்று குழுமம் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராயச்சி இயக்குநர் மரு. சங்குமணி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பனை நல வாரியம் அமைத்து பல்வேறு திட்டங்களால் பயன்பெறுகின்றனர் !

# பனைத் தொழிலாளர்களின் பாதுகாவல் அரணாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு!

## எர்ணாவூர் நாராயணன் அறிக்கை !

சென்னை, ஜூன் 18- பனைத் தொழிலாளர்களுக்கு தமிழக அரசு பாதுகாப்பாக உள்ளது என நல வாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கைவருமாறு:

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள பெரிய தாழையில் கள் தடையை நீக்க வலியுறுத்தி பனைமரத்திலிருந்து கள் இறக்கி அதனை பொது மக்களுக்கும் நிர்வாகி களுக்கும் ஊற்றி கொடுத்துள்ளார்கள். ஒரு அரசின் கொள்கை முடிவை பின்பற்றியே மக்கள் இருந்து வருகிறார்கள். குறிப்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சி காலத்திலே கள் தடை உள்ளது. பனை நல வாரிய தலைவராக இருந்த குமரி அனந்தன் அவர்கள் தமிழக அரசின் கள் தடைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் பதநீர் கருப்பட்டி போன்ற உற்பத்திக்காக இன்று பனைமர தொழிலாளர்கள் தமிழக முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் தொழில் செய்து வாழ்வாதாரம் செய்கிறார்கள் கடந்த ஆண்டு பனைமரத் தொழிலாளர்கள் வாரியம் சார்பாக ஒரு கோடி பனை விதைகள் விதைத்து உலக சாதனை பட்டியலில் இடம் பெற்றுள்ளோம்

அதன் பிறகு இன்று தமிழக அரசு பனைத் தொழிலாளர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் அறிவித்து அவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

தேர்தல் நெருங்கும் சமயம் போராட்டம் நடத்தி சிலர் அரசியல் ஆதாரம் தேடுகிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளாக பனைமர தொழிலாளர்கள் நலனுக்காக அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் தி.மு.க. அரசு



பொறுப்பேற்றவுடன் மீண்டும் பனை நல வாரியம் அமைத்து பனைத் தொழிலாளர்கள் பாதுகாவலராக தமிழக அரசு இன்று திகழ்ந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எர்ணாவூர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு, எம்.பி. முன்னிலை! கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமை!

# குன்றத்தூர் நகரத்தில் பாகம் வாரியாக கள ஆய்வுக் கூட்டம்!

## நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன்18- குன்றத்தூர் நகர தி.மு.க. செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த 762025 அன்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர் கள், தொகுதி மேற்பார்வையாளர் கள் கூட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு”என்கிற கொள்கை முன்னெ டுப்பின்படி ஒவ்வொரு வாக்குசாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர்களை புதிய உறுப்பினர்களாக இணைத்தல் மற்றும் வார்டு பாக வாரியாக கள ஆய்வுக்கூட்டம் குறித்து கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) 100 வாக்காளர்களுக்கு ஒரு மூகவர் (BLC) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கள ஆய்வுக் கூட்டம் இன்று (18.6.2025) வார்டு பாக வாரியாக திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமையிலும் மாவட்டச் செயலாளர் அமைச்சர், தா.மோ.அன்பரசன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இன்று (18-06-2025 புதன்கிழமை) மாலை 330 மணியளவில் கே.சிவகுமார் இல்லத்தில் (27வது வார்டு செயலாளர்) 196 வது பாகத்திலும் மாலை 410 மணியளவில் கார்த்திகேயன் எம்.சி. இல்லத்தில் (முருகன் கோயில் அருகில்) 200வது பாகத்திலும், மாலை 450 மணியளவில் சண்டீஸ்வரர் சாலை சேக்கிழார் நகரில், 211 வது பாகத்திலும் மாலை 530 மணியளவில் மாணிக்கவாசகர் சாலை, சேக்கிழார் நகரில் 212 வது பாகத்திலும் மாலை 6.10 மணியளவில் எம். மாரிமுத்து இல்லம், (18வது வார்டு செயலாளர்) மேத்தாநகரில் 188 வது பாகத்திலும் இரவு 6.50 மணியளவில் கங்கையம்மன் ஆலயம், ஆண்டாள்குப்பத்தில் 190 வது பாகத்திலும் இரவு 730 மணியளவில் சூர்யா நகர் சர்ச் அருகில், 30வது வார்டில் 215 வது பாகத்திலும் இரவு 810 மணியளவில் எம்.கே. முருகன் இல்லம், (29வது வார்டு செயலாளர்) 216 வது பாகத்திலும் இக்கூட்டம் நடைபெறுகிறது.

எனவே மேற்கண்ட வார்டு பாகங்களுக்கு உரிய வாக்கு சாவடி நிலை முகவர்கள் (BLA2), தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (31 நபர்கள்), 100 வாக்காளர்களுக்கு ஒரு முகவர் (BLC), மற்றும் வார்டு செயலாளர்கள், நகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி நிர்வாகிகள், ஏனைய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு இக்கூட்டத்தை சிறப்பாக நடத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் “ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் மத்திய மாவட்ட உட்பட ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளில் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கும் மாபெரும் முகாம் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி உறுப்பினர் சேர்க்கைக்கான படிவங்களை வழங்கினார் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே.ஜெ.ரமேஷ், நிவேதா ஜெசிகா , சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ். சங்கர், சண்.பிரகாஷ், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், தி.வை.ரவி, என்.இ.கே.மூர்த்தி, ஆர். ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர்.திருமலை , தி.வே.முனுசாமி, எம்.தங்கம் முரளி, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்